02 APR 2000

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை (02 - 04 - 2000) VALAMPURI ஒலி: 105

★ அநியாய உயிரிழப்புக்களைத் தவிர்க்க

# அரசாங்கமும் விடுதலைப் புலிகளும்

# யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்!

## யாழ். மன்னார் ஆயர்கள் கோரிக்கை

(எமது விசேட நிருபர்)

**யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவி வரும் யுத்தச் சூழ்நிலை காரணமாக ஏற்பட்டு வரும் அநியாய உயிர் இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்.**

யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அடிகளும் கூட்டாக அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் கோரியுள்ளனர்.

இன்று யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானப் பேச்சு வார்த்தையை மேற்கொள்வதே இன்றைய முக்கிய தேவையாக உள்ளது. இருசாராரும் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு வெளிநாடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந் நாட்டை ஆளும் உரிமை தமிழ் மக்களுக்கும் உண்டு

### ஆயர்கள் மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களுக்கும் இந்நாட்டை ஆளுகின்ற அடிப்படை உரிமை உண்டு என்ற அடிப்படையில் அதிகாரம்பரவலாக்கப்பட வேண்டும்.

சிங்கள மக்களுக்கு இந் நாட்டில் என்ன உரிமைகள் உண்டோ அந்த உரிமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்த சூழலில் சிக்கியுள்ள

## பளைப்பகுதி மக்களை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவும்!

### ஜனாதிபதியிடம் கூட்டணி கோரிக்கை

(கொழும்பு)

பளைப்பகுதியை அண்டிய பிரதேசங்களில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக அப் பகுதிகளில் சிக்கியுள்ள 5000 பொது மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கி இருப்பதாகவும் போதிய மருத்துவ வசதிகள் இன்றி கஷ்டப்படுவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா

[8 ஆம் பக்கம் பார்க்க]

## அம்புலன்ஸ் சகிதம் சென்ற குழு எழுதுமட்டுவாளுடன் திரும்பியது

(சாவகச்சேரி)

பளையில் காயமடைந்தவர்களைப் பார்வையிட்டு சிகிச்சையளிப்பதற்காகச் சென்ற சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அதிகாரி டாக்டர் யமுனானந்தனை எழுதுமட்டுவாளுக்கு அப்பால் செல்வதற்கு ஏற்ற சூழ்நிலை இன்மையால் படையினர் அனுமதிக்கவில்லை எனத் தெரிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காட்டில் துப்பாக்கிச்சூடு பொலிஸார் ஒருவர் ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்து கிழக்குப்பக்கமாக செல்லும் ஆடியபாதம் வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இவரது சடலத்தில் மூன்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

## இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் தெற்கு மந்துவிலைச் சேர்ந்தநவசிவாயம் ரவீராஜ சிங்கம் (வயது 38) தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த போது இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்.

நீர்வேலி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த ரத்தினம் கமலகுமார் இராணுவத்தின

(8 ஆம் பக்கம்பார்க்க)

## சடலம் கையளிப்பு

[கொழும்பு]

விபத்துக்குள்ளான அன்ரநோவ் '26' விமானத்தில் பயணம் செய்த படைவீரரின் கருகிய சடலங்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைத்து அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

[வ]

## ஓயாத அலைகள் -3 நடவடிக்கையில் உயிரிழந்த புலிகளின் பெயர் விபரம்

(வவுனியா)

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின்போது தமது தரப்பில் உயிரிழந்த 43 உறுப்பினர்களின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

★ கரும்புலிமேஜர் தனுஷன் (தம்பிராசா இலங்கேஸ்வரன் திருமலை)

★ கரும்புலி மேஜர் சுதர்ஷனி (தெய்வேந்திரபிள்ளை ஜெயசுகி யாழ்ப்பாணம்)

★ மேஜர் வாணன், சொக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பளை, இயக்கச்சிப் பகுதிகளில் புலிகள் இராணுவம் மோதல்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் இயக்கச்சிப் பகுதி முன்னணி நிலைகள் மீதும் பீரங்கித் தளங்கள் மீதும் மேற்கொண்ட தாக்குதல்களை படையினர் முறியடித்துள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

மேற்படி மோதல்களின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியில் ஐ. சி. ஆர். சி. பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மருதங்கேணி தாளையடி பகுதிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்று விஜயம் செய்து அங்குள்ள நிலமைகளை நேரில் அவதானித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாளையடியில் உள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். கல்வி வலயத்தில்

## ஆசிரியர் நியமனம்பெற்ற தொண்டர் ஆசிரியர் விபரம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவையில் உள்வாங்குவதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் மேலும் 91 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு ஆசிரியர் நியமனம் பெற்றவர்களில்யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச்

[8ஆம் பக்கம் பார்க்க]

★ அம்பன்,குடத்தனையைச் சேர்ந்த

## 328குடும்பங்களின்பிஞ்சு உள்ளம் ஒருநேரம் உணவின்றி தவிப்பு

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தொடரும் இராணுவ அனர்த்தங்களால் இடம் பெயர்ந்துள்ளபெருமளவு மக்கள் தங்க இடமோ அல்லது சமைத்து உண்பதற்கு ஏற்ற வசதிகளோ இன்றி பெரும் அவல நிலைக்குட்பட்டுள்ளனர்.

அம்பன் கிராமசேவையாளர் பிரிவில் உள்ள சுமார் 314குடும்பங்களும், குடத்தனையைச்சேர்ந்த 14குடும்பங்களும் இவ்வாறு பெரும் நிர்க்கதிக்குள்ளாகியதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் நேற்று நண்பகல் அளவில் இப்பகுதியில் பெய்த கடும் மழையினால் இம்மக்கள் சமைப்பதற்குக்கூட வசதியற்று தவித்ததாகவும் அறியப்படுகிறது.

பிஞ்சுக்குழந்தைகள் சிறுவர்கள் பசியால் நாயாய் தவித்தது சகிக்க முடியாது

(8ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய செவ்வாய் தோஷமற்ற மிருகசீரிடம் 1-ஆம் பாதம் 25¼ கிரக பாவம் உள்ள பயிற்றப்பட்ட ஆசிரியருக்குத் தகுந்த மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு C/O வலம்புரி Box No-001 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம். (272)

### நூலக சேவை

சிறுவர், இளைஞர், யுவதிகள் மற்றும் முதியவர்களுக்கான நூல்கள், ஈழத்து, தமிழக சஞ்சிகைகளை இலகு வாடகையில் பெற்று வாசித்து மகிழ நாடுங்கள், லிங் லெண்டிங் லைப்ரரி, Ling Lending Library. 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (269)

## இட மாற்றம்

(மானிப்பாய்)

நல்லூர் பிரதேச சபையின் சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலையில் நீண்ட காலமாக பணியாற்றிய டாக்டர் திருமதி. தவமலர் விஜயரட்ணம் மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக இலவச சித்த ஆயுள் வேத வைத்தியசாலைக்கு கடந்த மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(க-120)

## (இராசி பலன்)

02.04.2000
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 20)

திரயோதசி முன் நிலவு 1.37 வரை, சதயம் மாலை 4.14 வரை, சித்தயோகம், இராகுகாலம் மாலை 5.11 முதல் 6.42 வரை, சுப நேரம் காலை 9.38 முதல் 11.08 வரை, பிரதோச விரதம்,

**மேடம்:** தொழில் முன்னேற்றம், காரியசித்தி, உறவுமேம்படல்

**இடபம்:** குடும்ப ஒற்றுமை, சொத்து சேர்மை, மனநிறைவு.

**மிதுனம்:** வாய்த்தர்க்கம், மூடநம்பிக்கை, அலைச்சல்.

**கடகம்:** மகிழ்ச்சிக்குறைவு, கடன் உபாதை, ஆவேசம்.

**சிங்கம்:** புதியசூழ்நிலை, அடிமைத்தனம், ஏளனம்.

**கன்னி:** தீர்வுகிட்டல், அவசியப்பயணம், காதல்வெற்றி.

**துலாம்:** நோய்துன்பம், அதிகசிந்தனை, குடும்ப கவலை.

**விருச்சிகம்:** வீடுமாற்றம், தைரியக் குறைவு, பணிவின்மை.

**தனுசு:** பெருமைநாடிவரும், வரவு அதிகம், கலைஞானம்.

**மகரம்:** ஏற்றத்தாழ்வு, தொழில் தகராறு, மனப்பதட்டம்.

**கும்பம்:** தெய்வவழிபாடு, குடும்பச் செலவு, பெண்உதவி.

**மீனம்:** உளவாளிகள்துயர், தனிமைப்படல், சினப்படல்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## இன்று பொதுக் கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்திய விவசாய சம்மேளனப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3.00 மணிக்கு கோப்பாய் மத்தி வெள்ளருப் பிள்ளையார் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(வெளிமாவட்டத்திற்கு வாழைக் குலை அனுப்புவதற்கான சம்மேளன அங்கத்தவரிடம் விபரம் சேகரிக்கவுள்ளதாலும், உதவி ஆணையாளரிடம் இதுசம்பந்தமாகக் கலந்துரையாட உள்ளதகாவும் சகல அங்கத்தவர்களையும் சமூகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

(க-79)

## மண்டபம் புனரமைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலின் முன்புற வழிபாட்டு மண்டபம் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

பக்தர்களின் வழிபாட்டு வசதி கருதி அவ்வூர் மக்களின் உதவியுடன் பல லட்ச ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இவ் ஆலய மண்டப வேலைகள்யாவும் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளது.

(க-14)

## UNIVERSITY OF JAFFNA

GELT-1999/2000

Applications are invited from qualified English Teachers to teach in the above programme to be conducted by the University of Jaffna for students entering the Uuiversity in 2000. English Teachers with at least five years of teaching experience in the Secondary/tertiary level may apply. Those who have participated in this Programme during the previous years may also apply. Age limit 60 years.

Classes will be conducted after school hours. Applications with bio-data typed or hand written should reach the office of the Senior Assistant Registrar, Establishment, University of Jaffna on or before 10th of April 2000. Please indicate the centre (Jaffna, Manipay, Chavakachcheri, Point Pedro) to which you wish to be posted.

REGISTRAR [C/159]

## பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 01 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 131644 ஏ | 135940 ஏ |
| 135940 பி | 138184 ஏ |
| 138184 பி | 138184 சி |
| 138184 டி | 138231 ஏ |
| 138281 ஏ | 138281 பி |
| 138384 ஏ | 138384 பி |
| 138384 சி | 138389 ஏ |
| 138418 ஏ | 138418 பி |
| 138435 ஏ | 138435 பி |
| 138435 சி | 138490 ஏ |
| 138497 ஏ | 138500 ஏ |
| 139503 ஏ | 138503 பி |
| 139539 ஏ | 139539 பி |
| 139592 ஏ | 139604 ஏ |
| 139621 ஏ | 139621 பி |
| 139622 ஏ | 139628 ஏ |
| 139628 பி | 139695 ஏ |
| 139695 பி | 139711 ஏ |
| 139711 பி | 139715 எ |
| 139719 ஏ | 139719 பி |
| 139794 ஏ | 139794 பி |
| 139830 ஏ | 141336 ஏ |
| 141336 பி | 141336 சி |
| 141411 ஏ | 141417 ஏ |
| 241417 பி | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 136077 ஏ | 141013 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 140881 ஏ | 140882 ஏ |
| 140888 ஏ | 140946 ஏ |
| 140947 ஏ | 141084 ஏ |
| 141086 ஏ | 141086 பி |
| 131780 ஏ | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 136070 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 124205 ஏ | 134027 ஏ |
| 134027 பி | 136437 ஏ |
| 136478 ஏ | 136493 ஏ |
| 136493 பி | 136508 ஏ |
| 136508 பி | 136515 ஏ |
| 136515 பி | 136517 ஏ |
| 136519 ஏ | 136520 ஏ |
| 136520 பி | 136526 ஏ |
| 136526 பி | 136531 ஏ |
| 136531 பி | 136533 ஏ |
| 136534 பி | 136534 ஏ |
| 136537 பி | 136537 எ |
| 146537 டி | 136537 சி |
| 136540 ஏ | 136537 ஈ |
| 136544 ஏ | 136540 பி |
| 136553 ஏ | 136544 பி |
| 136553 சி | 136553 பி |
| 136561 பி | 136561 ஏ |
| 136563 ஏ | 136562 ஏ |
| 136564 பி | 136564 ஏ |
| 136626 ஏ | 136619 ஏ |
| 136786 ஏ | 136637 ஏ |
| 139843 ஏ | 139478 ஏ |
| 139859 பி | 139859 ஏ |
| 139865 ஏ | 139861 ஏ |
| 139873 எ | 139872 ஏ |
| 139878 பி | 139878 ஏ |
| 139880 பி | 139880 ஏ |
| 139882 பி | 139882 ஏ |
| 139885 ஏ | 139884 ஏ |
| 139893 எ | 139885 பி |
| 139930 ஏ | 139893 பி |
| 139930 சி | 139930 பி |
| | 140951 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 123101 ஏ | 123101 பி |
| 124389 ஏ | 128332 ஏ |
| 128332 பி | 128332 சி |
| 128353 ஏ | 128353 பி |
| 128355 ஏ | 133225 ஏ |
| 133262 ஏ | 136032 ஏ |
| 136050 ஏ | 136053 ஏ |
| 136067 ஏ | 136088 ஏ |
| 136134 ஏ | 136142 ஏ |
| 136142 பி | 136143 ஏ |
| 136145 ஏ | 336145 பி |
| 136146 ஏ | 136150 ஏ |
| 136735 ஏ | 136735 பி |
| 336736 ஏ | 136736 பி |
| 136739 ஏ | 136742 ஏ |
| 136742 பி | 136745 ஏ |
| 136747 ஏ | 136749 ஏ |
| 136772 ஏ | 136772 பி |
| 136792 ஏ | 139833 ஏ |
| 139853 ஏ | 139857 ஏ |
| 139857 பி | 139857 சி |
| 139857 டி | 139889 ஏ |
| 140883 ஏ | 140890 ஏ |
| 140941 ஏ | 140942 ஏ |
| 141012 ஏ | 141082 ஏ |
| 141088 ஏ | 135484 ஏ |
| 135484 பி | 135484 சி |
| 135787 ஏ | 135947 ஏ |
| 135947 பி | 138264 ஏ |
| 138265 ஏ | 138372 ஏ |
| 138395 ஏ | 138395 பி |
| 138426 ஏ | 138437 ஏ |
| 138437 பி | 138437 சி |
| 130437 டி | 138520 ஏ |
| 138525 ஏ | 138561 ஏ |
| 138561 பி | 139542 ஏ |
| 139544 ஏ | 139544 பி |
| 139563 ஏ | 139683 ஏ |
| 139683 பி | 139683 சி |
| 139683 டி | 139683 ஈ |
| 239685 ஏ | 139723 ஏ |
| 139727 ஏ | |
| 139751 ஏ | 139751 பி |
| 139754 ஏ | 139756 ஏ |
| 139757 ஏ | 139757 பி |
| 139757 சி | 139760 ஏ |
| 139802 ஏ | 139819 ஏ |
| 141182 ஏ | 141212 ஏ |
| 141309 ஏ | 141309 பி |
| 141333 ஏ | 141422 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 129208 ஏ | 129245 ஏ |
| 131329 ஏ | 131329 பி |
| 131329 சி | 131643 ஏ |
| 135760 ஏ | 135760 பி |
| 135799 ஏ | 138226 ஏ |
| 138323 ஏ | 138323 பி |
| 138375 ஏ | 138375 பி |
| 138404 ஏ | 138404 பி |
| 138404 சி | 138454 ஏ |
| 138454 பி | 138478 ஏ |
| 138478 பி | 138478 சி |
| 138489 ஏ | 138501 ஏ |
| 138501 பி | 138518 ஏ |
| 138518 பி | 138518 சி |
| 138518 டி | 138542 ஏ |
| 139585 ஏ | 139585 பி |
| 139586 ஏ | 139629 ஏ |
| 139630 ஏ | 139665 ஏ |
| 139678 ஏ | 139678 பி |
| 139700 ஏ | 139700 பி |
| 139759 ஏ | 141421 ஏ |
| 141421 பி | 142180 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 136354 ஏ | 136354 பி |
| 125326 ஏ | 135685 ஏ |
| 135685 பி | 138254 ஏ |
| 138251 பி | 138376 ஏ |
| 138479 ஏ | 138491 ஏ |
| 139555 ஏ | 139555 பி |
| 139555 சி | 139578 ஏ |
| 139599 ஏ | 139657 ஏ |
| 139740 ஏ | 139749 பி |
| 139750 ஏ | 139799 ஏ |
| 139799 பி | 139799 சி |
| 139799 டி | 139821 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 134252 ஏ | 134252 பி |
| 134252 சி | 136144 ஏ |
| 136339 ஏ | 136339 பி |
| 136349 ஏ | 136355 ஏ |
| 136355 பி | 136360 ஏ |
| 139365 ஏ | 136366 ஏ |
| 136372 ஏ | 136372 பி |
| 136375 ஏ | 136379 ஏ |
| 136379 பி | 136379 சி |
| 136381 ஏ | 136387 ஏ |
| 136387 பி | 136387 சி |
| 139888 ஏ | 139888 பி |
| 139888 சி | 131731 ஏ |
| 131760 ஏ | 135535 ஏ |
| 135963 ஏ | 135963 பி |
| 138460 ஏ | 138460 பி |
| 138494 ஏ | 138504 ஏ |
| 139547 ஏ | 139595 ஏ |
| 139595 பி | 139595 சி |
| 139596 ஏ | 139654 ஏ |
| 139654 பி | 139654 சி |
| 139658 ஏ | 139658 பி |
| 139664 ஏ | 139664 பி |
| 139698 ஏ | 139703 ஏ |
| 139728 ஏ | 139730 ஏ |
| 139730 பி | 139741 ஏ |
| 139755 ஏ | 139814 ஏ |
| 139814 பி | 141190 ஏ |
| 141195 ஏ | 141301 ஏ |
| 141302 ஏ | 141305 ஏ |
| 141334 ஏ | 141419 ஏ |
| 141419 பி | |

## பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் சி. நாகேந்திரன்

அவர்களின்

20வது பிறந்த நாளை (02-04-2000) முன்னிட்டு அவரை அவரது நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/273)

நண்பர்கள்.

## கண்காட்சியும் விற்பனையும்

(நெடுந்தீவு)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளின், தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் நேற்று சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகின்றது.

நெடுந்தீவு பகுதி உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, பிரதேச சபைத் தலைவர் ஏ. டபிள்யு, அரியநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (க-82)

## இன்று முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டபேக்கரி உரிமையாளர் சங்க கூட்டம் இன்று காலை யாழ்ப்பாணம் கண்டி வீதியில் இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் அமுல் படுத்தப்படவுள்ள பாணின் புதிய விலை, புதிய நிறை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாகமேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-03)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(அரியாலை)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 51 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறவுள்ள மென்பந்து கிரிக்கெட்போட்டியின் 1 வது ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

இவ் ஆட்டத்தில் நாவலர் விளையாட்டுக் கழகம் எதிர் றெட்லைன் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

(செ-106)

## இன்று கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் வெற்றிக் கிண்ண துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று விளையாடவுள்ள அணிகள் வருமாறு.

காலை 8.30 மணிக்கு மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 1.00 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய (ஏ) விளையாட்டுக் கழகம். (செ)

## தடகள விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் நடத்தும், இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை யா/ சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலி. தெற்கு இளைஞர் கழக சம்மேளன தலைவர் சி.பீஷ்மன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார். (செ)

மட்டக்களப்பில்

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் டேபா திட்டத்தை அமுல்நடாத்த அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் நோர்வே அரசின் 'டேபா' திட்டத்தை நடைமுறைப்படுத்த பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரமளித்துள்ளது. இதற்கான அங்கீகாரத்தை அஞ்சல் தொலைத் தொடர்புகள் தொடர்பு சாதன பிரதியமைச்சர் அல்ஹாஜ் எம். எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இது தொடர்பான பாதுகாப்பு உயர் மட்ட மாநாடு பிரதியமைச்சரின் காத்தான்குடி அலுவலகத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சோமபால வடகிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜீ. கிருஷ்ணமூர்த்தி மாவட்ட செயலாளர் ஏ. கே. பத்மநாதன் உட்பட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டனர். மாநாட்டின் முடிவில் மேற்படி பிரதேசத்தில் அபிவிருத்திட்டங்களை முன்னெடுப்பதென முடிவு காணப்பட்டது. (க-60)

வடக்கு - கிழக்கு மாகாண

# ஆளுநர் - ஈ. பி. டி. பி. முக்கியஸ்தர்கள் கொழும்பில் பேச்சு வார்த்தை

### ஆசிரியர் நியமனம், உட்பட பல விடயங்கள் ஆராய்வு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனவிற்கும், மட்டக்களப்பு மாவட்ட ஈ. பி. டி. பி முக்கியஸ்தர்களுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

ஆளுநரின் கொழும்பு அலுவலகத்தில் இடம் பெற்ற மேற்படி பேச்சுவார்த்தையில் மட்டு, அம்பாறை ஈ. பி. டி. பி அமைப்பாளர்கள், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி. தவராஜா, டாக்டர் விக்கினேஸ்வரன், எம். புஸ்பராஜா உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பில் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கல் அரசு காணிகளில் வசிப்போருக்கு உறுதி வழங்கல் உட்பட முக்கிய பல பிரச்சினைகளும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் ஜீவாதாரப் பிரச்சினைகள், போக்குவரத்துப் பிரச்சினை, பாஸ் வழங்கும் நடைமுறை குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் குறித்து தான் முக்கிய நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-60)

## ஜனாதிபதி - ஆளுநர் விரைவில் சந்திப்பு முக்கிய விடயம் ஆராயப்படும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்தி சம்பந்தமாக ஜனாதிபதியுடனான உயர்மட்டச் சந்திப்பொன்று வெகு விரைவில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன, வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி உட்பட பல உயர்மட்ட பிரமுகர்கள் இச்சந்திப்பில் கலந்து கொள்வர் என்று இம்மாதம் 6ம் திகதி இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் பற்றி இச்சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-60)

## ஊர்காவற்றுறை பொதுச் சந்தை சீரமைப்பு பணிகள் துரிதகதியில் முன்னெடுப்பு

[ஊர்காவற்றுறை]

15 வருடங்களுக்கு மேலாக முற்றாகச் சேதமடைந்த நிலையில் இருந்த ஊர்காவற்றுறைப் பொதுச் சந்தையைப் புனரமைக்கும் வேலைகள் தற்போது இடம் பெற்றுவருகின்றது.

இவ்வேலைகளுக்கான நிதியினை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் வடமாகாண மீளக்குடியேற்றப் புனர்வாழ்வு அதிகார சபை ஒதுக்கியது.

இப்புனர்நிர்மான வேலைகளுக்கு சுமார் 35 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகளை ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா மேற்பார்வையில் இவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (சி-75)

### புதிய நூலகம் திறப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின், பொதுநூலகம் புதிய மாடிக்கட்டடப் பணி முடிவுறும் தறுவாயிலுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து ஒதுக்கபட்ட 15 இலட்சரூபாவில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்திறப்பு விழா இம்மாத நடுப்பகுதியில் இடம் பெறவுளது.

### ஆசிரியருக்கு பயிற்சி

(அரியாலை)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கணனிப் பயிற்சி நிலையத்தினால் பாடசாலை ஆசிரியர்கள் 20 பேருக்கு MS-WORD-2000 (மைக்ரோ சொவ்ற்வேட் 2000) பயிற்சி நெறி இலவசமாக வழங்கப்படவுளது.

அதிபரின் சிபார்சுடன் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கும் படி கேட்கப்பட்டுளது (க-106)

### வீதி திருத்தம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் கீழுள்ள புளியங்கூடல் தெற்கு வீதி புனரமைப்புச் செய்யப்படவுளது.

இதற்கென 17 இலட்சம் ரூபா நிதியினை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம் ஒதுக்கியுள்ளது (உ-75)

## மென்பந்து கிரிக்கெட் ஆட்டம் இறுதி நிகழ்வு இன்று இடம் பெறும்

குருநகர் சென். றேர்க்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மேற்படி கழகமைதானத்தில் இடம் பெறவுளதாக தலைவர் ஏ. நகுலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த ஒரு வாரமாக தொடரும் இப்போட்டியானது 15 மென்பந்து பரிமாற்றங்களைக் கொண்டது என்றும் இப்போட்டியில் பரிசளிப்பு நிகழ்வு இன்று நடைபெறும் என்றும் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ. எவ் ஜே. ரூபசிங்கம் கலந்து கொள்வார். என்றும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கரபந்தாட்ட சம்மேளன தலைவர் கப்டன் வீ. ஏ. எம் குணசிங்கம் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

வடமராட்சி கிழக்கில்

## தொடரும பதற்ற நிலையால் சிதறுண்ட நிலையில் குடும்பங்கள்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் தொடரும் பதற்ற நிலையை அடுத்து அங்கு வசித்த குடும்பங்கள் சிதறுண்ட நிலையில் திக்குத்திசை தெரியாது நடந்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கணவன் மனைவி பிள்ளைகள் வேவ்வேறு இடங்களில் பிரிந்து பெரும் துன்பம் அனுபவித்து வருவதாகவும் இவர்களை ஒன்று சேர்க்க முயற்சிகள் மேற்கொளப்பட்டுவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மாமுனை மருதங்கேணி. போன்ற யுத்தப் பிரதேசங்களில் வாழ்ந்தோரே இவ்வாறு உறவினர்களைப் பிரிந்து கலங்குகின்றனராம்.

தொடரும் பதற்ற நிலையால்

## இடம் பெயர்ந்த மக்களுக்கு இல. செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(இளவாலை)

இத்தாவில், பளை பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள குடும்பங்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உதவிகளை செய்து வருகிறது வீடுகளில் உள்ளவர்களுக்கு சமயல்பாத்திரங்கள் வாளி, பாய், சவர்க்காரம் விளக்கு, பீங்கான்கள், கோப்பைகளையும் காயப்பட்டு வைத்தியசாலைகளில் இருப்பவர்களுக்குநுவாய், பெட்சீட் சவர்க்காரம், சாறி, சாறம், சேட், கவுன், சட்டைத்துணி என்பவற்றை வழங்கிவருகிறார்கள். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இருக்கும் 32 குடும்பங்களுக்கு வழங்கினார்கள் பிற இடங்களில் இருப்பவர்கள் தகுந்த முறையில் தமக்கு தெரிவித்தால் அவர்களுக்கும் எம்மால் உதவி செய்ய முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தார்கள். (க-12)

## தானியச் செய்கையில் ஆர்வமற்ற தென்மராட்சி விவசாயிகள்

### பதற்ற நிலைமை காரணமாம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இவ்வருடம் விவசாயிகள் சிறுதானிய உற்பத்தியில் போதிய ஆர்வம் காட்டவில்லையெனத் தெரியவருகின்றது

தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட பயறு உழுந்து கௌப்பி போன்றவை தாராளமாக தனியார் கடைகளில் இருப்பதன் காரணமாக சிறுதானிய உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபடவில்லை.

அதேவேளை அரசசார்பற்ற நிறுவனங்களும் இத்தகைய திட்டங்களுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குவதற்குமுன்வரவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளையில் தற்போது பளை உள்ளிட்ட தென்மராட்சிப் பகுதியில் தொடரும் அசாதாரண நிலமையானது விவசாயிகளின் ஆர்வத்தை மேலும் பின்தள்ளிச் செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது. (க-77)

வடக்கு கிழக்கில்

# ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விதம் தவறு

### பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவிப்பு

(பருத்தித்துறை)

வடக்கு-கிழக்கில் ஆசிரியர் தெரிவிற்காக நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டவிதம் முறைகேடானது நீதியற்றது என பாதிக்கப்பட்டோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், மேற்படி நேர்முகத்தேர்வின்போது ஆரம்ப கல்வி பாட நெறிக்கு விண்ணப்பித்தோர் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாகவும், நேர்முகத்தேர்வுக்கு வேறு பாடநெறிகளுக்கு அழைக்கப்பட்டிருந்தோரில் அனேகர் பல்கலை அனுமதி கிடைத்தோரும், அரச சேவையில் ஏற்கனவே இணைந்துள்ளவர்கள் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இறுதியாக நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மேற்படி நேர்முக தேர்விற்கு அழைக்கப்பட்டனர் என்பதையும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர் கவனத்தின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.

இதுதொடர்பான சாதகமான பதிலெதுவும் இற்றைவரை கிடைக்காமையை யடுத்து எதிர் வரும் 3 ஆம் திகதி இவ் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு நடைபெறும் தினமான திங்கட்கிழமை நேர்முகத்தேர்வு இடம்பெறும் யாழ். கல்வி வலயத்திற்கு முன்பாகவே இவ் உண்ணாவிரதம் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-உ-11)

## கட்டுப்பாடு உடையவர்களாக விளையாட்டு வீரர் திகழவேண்டும்

விளையாட்டு வீரர்கள் கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய சர்வதேச விளையாட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப நடக்க வேண்டும் என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு JX. செல்வநாயகம் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையேயான தடகள விளையாட்டு விழாவின் பரிசளிப்பு வைவபத்திலேயேசிறப்புவிருந்தினர்க்கா கலந்துகொண்டு மேற்படி கருத்தை வெளியிட்டார்.

ஊர்காவற்துறைப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் செல்வன் ஞா. செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் இடம்பெற்ற இன் நிகழ்வில் ஊர்காவற்துறைப் பிரதேசசபைத் தலைவர் திரு என். மதனராஜா பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் தீவக பிரதேச விளையாட்டு அபிவிருத்தி செயற்பாட்டுக்கு இவ் ஆண்டு முக்கியத்துவம் கொடுத்து தான் ஈடுபடப்போவதாக தெரிவித்தார்.

மேதினத்தை முன்னிட்டு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் குழு, தடகள விளையாட்டுச்சுற்றுப்போட்டி பெரும் எடுப்பில் இடம்பெற இருப்பதாகவும், இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணம் வழங்க முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (க-75)

# பொன்விழாக் காணும் தூதரக உறவு இந்திய சீன முயற்சியின் மைல்கல்

(புதுடில்லி)

இந்தியாவுடன் உறவுகளில் வளர்ச்சியும் மேம்பாடும் மிக்க ஒரு புதிய கட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சீனா கூறுகிறது.

சீன -இந்திய தூதரக உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 50 ஆண்டு நிறைவை ஒட்டி சீன அதிபர் இந்தியத் தலைவர் திரு. நாராயணனுக்கு அனுப்பிய செய்தியில் இந்த உறவு மேலும் வலுப்பெறும் என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் குறிப்பிடுகையில் இந்தியாவுடன் நட்புறவு கொண்டு ஒத்துழைப்பும் ஏற்படுத்த சீனா எப்பொழுதும் விரும்புகின்றது என்றார்.

இதையொட்டி ''பஞ்சசீலக் கொள்கை அடிப்படையில் மேலும் சீனாவுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள இந்தியா என்றும் காத்திருக்கிறது என்று இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

(து)

# பீரங்கிப் படையை பலப்படுத்துவதில் இந்திய அரசு தீவிர ஈடுபாடு

(புதுடில்லி)

இந்தியாவில் எல்லைப் பகுதியில் தற்போது ஏற்பட்டு வரும் பதற்ற நிலையை யடுத்து பீரங்கிப் படையை பலப்படுத்தும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு துறை செய்திகள் தெரிவித்துள்ளன.

இதன் முன்னோடி நடவடிக்கையாக 4.75 டொலர் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று இஸ்ரேலிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் ஒன்றுடன் இந்திய அரசாங்கம் மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, இந்தியாவின் 150 சிறு பீரங்கிகளைத் தரப்படுத்தி நடுத்தர பீரங்கிகளாக மாற்றும்பணி நடைபெறவுள்ளது.

ரஷ்யாவின் தயாரிப்பான 130 மில்லியன் மீற்றர் எம் 46 ரக மேற்படி பீரங்கிகளையும் இஸ்ரேல் இராணுவத்தில் பயன்படுத்தப்படும் 155 மில்லி மீற்றர் நடுத்தர பீரங்கிகளாக மேம்படுத்தும் இப்பணி வரும் இரு ஆண்டுகளில் நிறைவுறும் என நம்பப் படுகிறது.

மாற்றியமைக்கப்பட்ட பின்னர் இப் பீரங்கிகளின் சுடுதிறன் 39 கிலோ மீற்றராக அதிகரிக்கும் எனவும் இந்திய பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது

(க-உ)

# ஜப்பானில் பெரும் எரிமலை வெடிப்பு மக்கள் பெருமளவில் வெளியேற்றம்

## வானைநோக்கி அக்கினிப் பிளம்புகள்

(ரோக்கியோ)

ஜப்பானில், எந்தநேரமும் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட கொட்டனோர் தீவு எரிமலை நேற்று முன்தினம் குமுறியுள்ளது.

முன்னரே எதிர்பார்க்கப்பட்ட எரிமலைக் குமுறலாகையால், மக்கள் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உயிரிழப்புகளைத் தவிர்த்துள்ளனர்.

எரிமலை வெடிப்பு ஏற்படுவதற்கு சில நிமிட நேரங்கள் முன், மலைப்பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டதாகவும், அது குமுறிய போது மிகப் பெரியளவில் வானை நோக்கிச் சாம்பல் கிளம்பியதோடு, பாறைகளும், வாயுக்களும் வேகத்தோடு வெளிக்கிளம்பிக் கொண்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (க-உ)

# துருக்கிய பிரதமருக்கு டாக்டர் பட்டம் சாந்திநிகேதன் பல்கலை-வழங்கியது

துருக்கியநாட்டு பிரதம மந்திரி புலன் எஸ் வித் அவர்களுக்கு இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்று டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

இவர் தாகூர் எழுதிய கீதாஞ்சலியை துருக்கிய மொழியில் எழுதிவெளியிட்டார் அதேவேளை இந்திய பழம் இலக்கிய நூல்களையும் துருக்கியில் எழுதியிருந்தார். இவருக்கு இந்தியாவின் சாந்திநிகேதன் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

(து)

## உலக தரிசனம்

# கறுப்பின விரோத வெள்ளையர் கறுப்புச் சட்டையுடன் சிறை வாசம்

(பிறிற்றோறியா)

கறுப்புச் சட்டை அணிந்தபடி சிறைவாசம் சென்ற கென் பிறான் அப்படியே அங்கும் இருப்பாராம் என்று கூறப்படுகிறது.

தென்னாபிரிக்க கறுப்பின எதிர்ப்பியக்கத்தைச் சேர்ந்த தீவிர வாதியான கென் பிறான் கறுப்பினத்தவர்களுக்குச்செய்த அக்கிரமங்களுக்காகச் சிறைபிடிக்கப்பட்டார்.

கறுப்புக் குதிரையில் கறுப்புச் சட்டை அணிந்த நிலையில் கைது செய்யப்பட்ட அவரை நீதிமன்றம் விசாரித்தது.

தென்னாபிரிக்காவில் ஒரு காலத்தில் கறுப்பர்களுக்கு எதிராக அடக்கு முறைசெய்த சிறுபான்மை வெள்ளையர் இயக்கத்தைச் சேர்ந்த கென் பிறான் இன்று கறுப்பர்களுக்கு எதிராக வன்செயல்களில் ஈடுபட்டிருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்.

(து)

# நேருக்கு நேர் பஸ் மோதல் 100 க்கும் மேற்பட்டோர் பலி

## நைரோபியில் பரிதாப சம்பவம்

[கென்யா]

கென்யாவின் தலைநகர் நைரோபியில் இடம்பெற்ற மிகப் பெரும் பஸ் விபத்தொன்றில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். 37 பேர் படுகாயமடைந்தனர்.

நைரோபியில் இருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் வர்த்தக நகரமான கப்ததுங்காவிற்கு சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று எதிரே கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வந்த இன்னொரு பஸ்சுடன் மோதிக் கொண்டதிலேயே மேற்படி விபத்து நேர்ந்துள்ளது.

மோதிய வேகத்தில் இரண்டு பஸ்களும் தீப்பற்றி எரிந்ததாகவும் இதில் பயணம் செய்தவர்களில் மரணமான அனேகர் தீயிற்கருகிக்காணப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

காயமுற்றவர்களில் பலரது நிலை இன்னமும் கவலைக்கிடமான வகையிலேயே காணப்படுகிறது.

இவர்களில் குழந்தைகள் பெண்களே அதிக தொகையினராவர்.

கடந்த ஒரு சில வருடங்களில் நைரோபியில் நடந்த மிகப் பெரும் விபத்து இதுவென்று கூறப்படுகிறது.

(க-7)

## செய்திக் குவியல்

ஆஸ்திரியாவில் பனிப்பாறை உடைந்து வீழ்ந்ததில் 11 பேர் இறந்துள்ளனர். இவர்கள் மலையேறும் பொழுதே இப்பரிதாப சம்பவம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது.

இந்திய ஆளும் கூட்டுக் கட்சிகளுக்கிடையே எண்ணெய் விலையேற்றத்தால் பிளவுகள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

விஞ்ஞானி கஸ்தூரிரங்கனுக்கு பத்மவிபூஷன் விருது ஜனாதிபதியால் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்வான் படகொன்று சட்ட விரோதமாக பொருட்களுடன் குஜராத் கடற்கரைக்கு வந்ததினால் இந்தியக் கடற்படையினர் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

கேரளாவில் 5-வது சர்வதேசத் திரைப்பட விழா தொடங்கியுள்ளது இவ் விழாவில் 16 படங்கள் திரையிடப்படும். மென்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டின் சட்டமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடத்துவதற்குரிய அறிவித்தல் விரைவில் விடப்படும் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் ஜனநாயக நடைமுறைக்கு திரும்ப பல மாதங்களாகலாம் என்று சொல்லப் படுகிறது. (து)

# 90 பேர் படகுடன் மூழ்கினர் 11 சடலங்கள் மீட்பென அறிவிப்பு

பாகிஸ்தான் படகு விபத்தில் 90 பேர் நீரில் மூழ்கியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

பஞ்சாப் மாகாணத்தில்இந்தக்கொடூரச் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அளவுக்குக் கூடுதலாக ஆட்களையும், பொதிகளையும் ஏற்றிச் சென்றதால் இந்தப்படகு கவிழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

100க்கும் மேற்பட்டவர்கள் இதில் பயணம் செய்திருப்பார்களென்றும் 8 பேரே நீந்திக் கரையை அடைந்தார்களென்றும் 11 பேரின் சடலங்களே இன்றை வரை எடுத்ததென்றும் இதில் ஆண், பெண், குழந்தைகள் அடங்குவரென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுழியோடிகளும், பொலிஸாரும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# இந்திய அதிபர் சீனா செல்வார் இரு நாட்டு உறவில் புதிய மெருகு

(புதுடில்லி)

இந்திய ஜனாதிபதி கே.ஆர் நாராயணன் அடுத்த மாதம் அரச முறைப் பயணம் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல உயர் அதிகாரிகள் சகிதம் செல்ல இருக்கும் அதிபர் அங்கு இரு நாடுகளுக்கிடையிலும் ஏற்பட இருக்கும் உறவுப் பாலத்துக்கு பல ஆக்கபூர்வப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார் என்று சொல்லப்படுகிறது.

நேரு சௌவன்லை கால பஞ்சசீலத்தை ஞாபகப்படுத்தும் அடிப்படையில் அதே கொள்கைகளுடன் உரையாடல்கள் இடம் பெறலாமெனச் செய்திகள் கூறுகின்றன.

இதே வேளை பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் அதிபர் வருகையை சீனா குதூகலமாக வரவேற்பதற்கு ஏற்பாடுகள் செய்வதாகச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த நான்கு மாதங்களில் இந்திய சீன உறவு முறையில் பல அதிகாரிகள் அமைச்சர்கள் பயணங்கள் முக்கிய இடங்களை வகித்தன என்பது அறிந்தவைகளே.

(து)

# நடிகர் ரஜனிக்கு பத்மபூஷன் விருது இசைமேதை ரகுமானுக்கு பத்மகீர்த்தி

(புதுடில்லி)

மத்தியமந்திரி சபைக்காலம் வரும். பொழுது விரிவுபடுத்தப்படும். இப்போதைக்கு அந்த யோசனை இல்லை என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பத்மவிருதுகள் வழங்கும் வண்ணமிகு விழாவில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் மூன்று மந்திரிகள் விலகிய இடங்கள் இருக்கின்றன காலக் கிரமத்தில் அந்த இடங்களுக்கு மந்திரிகள் நியமிக்கப்படுவார்கள்.

அடுத்து ஜனாதிபதி நாராயணன் தேசியரீதியில் சாதனையாளர்களாகத் தெரிவானவர்களுக்கு பத்மபூஷன் பத்மகீர்த்தி போன்ற விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

75 பேர் இந்தவிருதுகளை விஞ்ஞானம் கலை அறிவியல் தொழில் நுட்பம் போன்ற துறைகளுக்காகப் பெற்றார்கள். தமிழர்களில் விஞ்ஞானத்தில் பத்மவிபூசனத்தை கஸ்தூரிரங்கன் அவர்களும், நடிப்புத்துறையில் பத்மபூஷன் நடிகர் ரஜனிகாந்துக்கும், இசைத்துறையில் பத்மகீர்த்தி இசைமேதை ஏ.ஆர் ரகுமானுக்கும் கிடைத்தன என்று அறிவிக்கப்படுகிறது, (து)

# போலி நோட்டு அச்சிட்ட 6 பேரைப் பொலிஸார் மடக்கினர்

[புதுடில்லி]

தமிழ் நாட்டில் போலிக் கரன்ஸி நோட்டுக்களை அச்சடித்து புழக்கத்தில் விட்டதற்காக 6 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம் மோசடியில் 7 பேர் ஈடுபட்டிருந்ததாகவும் இவர்களிடமிருந்து10 லட்சம் ரூபா போலிக் கரன்ஸி நோட்டுக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள், இப் போலிக் கரன்ஸி நோட்டுக்களைப் பாதி விலைக்கு விற்க முற்பட்ட போதே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.. (து-5)

# 450 கி. பாணின் பேக்கரி விலை 9 ரூ.

# தனியார் கடைகளில் 10 ரூபாவாம்

## யாழ்.செயலகம் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 15ஆம் திகதி முதல் யாழ். மாவட்டத்தில் 450 நிறை கொண்ட பாணின் உச்ச விலை பேக்கரிகளில் 9 ரூபாவும் தனியார் கடைகளிலே 10 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

மேற்கண்டவாறு யாழ். செயலக பாணின்விலை அதிகரிப்பு தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

பாண் உற்பத்தியில் ஈடுபடும் சகல தரப்பினரதும் கருத்துக்களையும், செயலக உத்தியோகத்தர்களின் கள விசாரணைகளையும் கருத்திற்கொண்டு மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பேக்கரியில் ஒரு இறாத்தல் பாணின் விலை 9 ரூபாவாகவும் தனியார் கடைகளில் பெறுவதாயின் (காவு கூலி, விற்பனைக்கூலி உட்பட) 10 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,

கடை உரிமையாளர் ஒருவர் தனது வாடிக்கையாளரின் நலன் கருதி தானே பேக்கரியில் பாணை எடுத்து கடையில் ரூபா 9 50 இற்கு விற்பனை செய்வதற்கு முன்வருவாராயின் வரவேற்கத்தக்கது.

பேக்கரி உரிமையாளர் நாளாந்தம் பணிஸ், பிஸ்கற் போன்றஉபஉணவுப்பொருட்களைத் தயாரிக்கும் போது இதே வளங்களையே பயன்படுத்துகிறார்கள்.

இந்த நிலையில் 450கிராம் நிறையிலான பாணை உற்பத்தி செய்து அதனைப் பேக்கரியில் 9.00 ரூபாவுக்கு விற்பனை செய்வது நட்டம் என்று கூறுவது பொருத்தமற்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம்,

கொழும்பில் 450 கிராம் பாணின் உச்ச சில்லறை விலை ரூபா 8.50 ஆகக் காணப்படினும் பாணின் உள்ளீடுகளின்யாழ். மாவட்ட விலையைக் கருத்திற்கொண்டும், எரிபொருள் (விறகு; மின்சாரம்) தொழிலாளர் சம்பளம் என்பவற்றைக் கருத்திற் கொண்டுமே மேற்படி விலை நிர்ணயம் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(க-உ)

# ஆட்டோ, மோ. சைக்கிள் விபத்தில் அதிகாரி காயம்: முலவையில் சம்பவம்

யாழ்ப்பாணம் முலவைச் சந்திப் பகுதியில் நேற்று முன் தினம் வீதியால் வந்து கொண்டிருந்த ஆட்டோவும் மோட்டார்சைக்கிளும் மோதியதில் மோட்டார்சைக்கிளில் வந்த யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக உத்தியோகத்தர் என். சூரியகுமார் கால் பகுதியில் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்தில் ஆட்டோவுக்கும் மோட்டார் சைக்கிளுக்கும் சிறிய சேதங்கள் ஏற்பட்டன. (சி-59)

# சகோதரர்க்கு இடையே சோடரியால் மூண்ட சண்டை கொலையில் முடிந்தது

## நாரந்தனையில் சம்பவம்

(இளவாலை)

நாரந்தனைப் பகுதியில் சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு அடிதடியாகமாறி ஒருவர் கொல்லப்பட்டார்.

சோடரியைக் காணவில்லை என்பதற்காக ஏற்பட்ட இப்பிரச்சினையில் 5பிள்ளையின் தந்தையான எஸ். நவரட்ணராஜா (45வயது) என்பவர் தலையில் பலமாக தாக்கப்பட்டதால் கடந்த வியாழக்கிழமை யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுநேற்று முன்தின வெள்ளிக்கிழமை மரணமானார்.

சந்தேகநபரான இவரது சகோதரனும்யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(சி-12)

# தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் மற்றும் அபிமானிகளும் நேற்று முன்தினம் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

யாழ். மாநகர சபை உறுப்பினர்களான செல்லையா விஜயரத்தினம் ச. அரவிந்தன் ஆகியோர் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர்.

இந் நிகழ்வில் சி.சிவமகாராஜா, வி.சி.வி.வைத்திலிங்கம், அ.பொ.செல்லையா, உடுவில் முத்துலிங்கம், கனகசபாபதி மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.ரஞ்சன் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பெனடிக்ற் தனபாலசிங்கம் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா ஆகியோரும் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ச)

# இளைஞர் சமுதாய நலன் கருதி அகவொளி நிறுவன கருத்தரங்குகள்

(புலோலி)

யாழ். அகவொளி நிறுவனத்தினரின் நல்வழிக் கருத்தரங்கு வட்மராட்சியில் மாதந்தோறும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில்நடைபெறவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்றைய இளைஞர் சமுதாயத்தை கலை,. கலாசார சமூக சீரழிவுகளில் இருந்து பாதுகாத்து அவர்களை நல்வழிப்படுத்துமுகமாகவே இக் கருத்தரங்குகள் நடாத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுளது.

இதன் முதலாவது கருத்தரங்கு இம் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அருட்தந்தை எஸ். யே. இராஜநாயகம் அடிகளார் ''இளைஞர்களும் செயற்பாடுகளும் பற்றி கருத்துரை நிகழ்த்துவார். [சி-52-)

# சேதமடைந்த நிலையில் பண்ணைப்பாலம் பயத்துடன் பயணம் செய்யும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்— தீவுப்பகுதிப் போக்குவரத்துப் பாதையின் பண்ணைப் பிரதான பாலம் மக்கள் மீள்குடியமர்வுக்குப்பின்னர் தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்டும் கூட (1996) தற்போது அப்பாலம் மிகவும் மோசமான நிலையில் வாகனங்கள் செல்வதற்கு அபாயகரமான நிலையில் காணப்படுகிறது.

பாலம் தற்போது உள்ள நிலையில் மிகுந்த பயத்துடனேயே தீவுப்பகுதி பிரயாணிகள் பயணம் செய்து வருகின்றனர். இது சம்பந்தமாக உரியவர்கள் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என மக்கள் விசனமடைந்துள்ளனர்.

(ந-105)

# ஆரம்பப் பிரிவு மாணவருக்கு விளக்கம்

(நீர்வேலி)

புத்தூர் ஸ்ரீசோமஸ் கந்தக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களை இக் கல்லூரிக்கு அருகில் உள்ள இந்து கிறிஸ்தவ ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று ஆலயங்களில் காணப்படும் பொருட்கள் பற்றியும், அங்கு கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் பற்றியும் விளக்கம் கொடுக்கப்பட்டது.

கடந்த வாரம் முதல் ஆரம்பப் பிரிவு மாணவர்களை ஒவ்வொரு ஆண்டாகக் கூட்டிச் சென்று இக் கல்லூரி ஆசிரியர்களினால் விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது:

(சி-9)

# குரு பூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ கடையிற் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு வரும் ஸ்ரீலஸ்ரீ பரமகுரு சுவாமிகளால் உபதேசிக்கப்பட்டவருமான ஸ்ரீமத்சாஸன் சுவாமிகளின் 92ஆவது குருபூசை இன்று கந்தர்மடத்தில் உள்ள வேதாந்தமடத்தில் நடைபெறும்.

வேதாந்த மடத்தில் ஆரம்ப குருவான ஸ்ரீமத் சாஸன் சுவாமிகளின் குருபூசையை குருபீடத்தின் ஏழாம் குருபீடாதிபதி ஸ்ரீமத்சோமஸ்கந்தவேள் சுவாமிகள் நடாத்திவைப்பர் (க)

## வலி- கிழக்கு பிரதேச செயலக

# நடமாடும் சேவை 04 ஆம் திகதி அச்சுவேலியில் கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச செயலகநடமாடும்சேவையை ஆரம்பித்து நடாத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் 4 ஆம் திகதி அச்சுவேலியில் முதலாவது நடமாடும் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வலி. கிழக்கு பிரதேச செயலக நடமாடும் சேவைகள் அச்சுவேலி பகுதியில் வலிகிழக்கு பிரதேச சபை உப அலுவலகத்திலும் உரும்பிராய், ஊரெழு பகுதியில் ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும் மாதந்தோறும் நடாத்தப்படவுள்ளன.

அச்சுவேலியில் நடாத்தப்படவுள்ள நடமாடும் சேவையில் வளலாய், இடைக்காடு, தம்பாலை கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு, நவக்கிரி, ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால் கிழக்கு, புத்தூர் வடக்கு புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, வர்த்தவத்தை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மக்களும் ஊரெழுவில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் ஊரெழு உரும்பிராயின் நான்கு பிரிவுகள அச்செழு ஆகிய பிரிவின் மக்களும் பங்குபற்றிப் பயன்பெறலாம்.

அச்சுவேலியில் நடைபெறும் நடமாடும் சேவை மாதத்தின் 1 ஆம்செவ்வாய்க்கிழமையிலும் ஊரெழுவில் நடைபெறவுள்ளது மாதத்தின் 4 ஆம் செவ்வாய்க்கிழமையிலும் நடைபெறும் இதன் பிரகாரம் அச்சுவேலியில் முதலாம் நடமாடும் சேவை 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஊரெழுவின் முதலாம் நடமாடும் சேவை 25 ஆம் திகதியும் (செவ்வாய்) நடைபெறும்.

இந்நடமாடும் சேவைகளின் போது நிவாரணம் முத்திரை, பொதுசன மாதாந்தப்பணம், காணி சம்பந்தமான விடயங்கள், கிராம அபிவிருத்தி, சொத்து இழப்பு நஷ்டஈடு, புனர்வாழ்வுக் கடன்கள் போன்ற விடயங்கள் பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# அமரர் கணேசலிங்கத்தின் குடும்பம் முழுமையான உதவி பெற வேண்டும்

## அஞ்சலி நிகழ்வில் அருட்தந்தைஉரை

(யாழ்ப்பாணம்)

"பாதிக்கப்பட்ட ஆட்டோசாரதி கணேசலிங்கத்தின் குடும்பத்தினரும் அவரின் இழப்பை ஈடு செய்யக்கூடியவாறு முழுமையான வேறு உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். என்று கடந்த திங்கட்கிழமை பளைப்பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது இடையில் சிக்கி உயிரிழந்த ஆட்டோ சாரதியான சிவலிங்கம் கணேசலிங்கத்தின் நினைவாக நேற்று நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுத் தலைவர் அருட்தந்தை கே ஜே. ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 9.30மணியளவில் ஆட்டோ சங்கத்தினரின் காரியாலயத்தில் அமரர் கணேசலிங்கத்தின் உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு பின் அஞ்சலி ஊர்வலம் ஆட்டோ சங்க நிர்வாகத்தலைவர் வி.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

ஊர்வலத்தில் ஆட்டோக்கள் அணிவகுத்து ஆஸ்பத்திரி வீதியூடாக காங்கேசன்துறை வீதியைச் சென்றடைந்து பின் அமரர் கணேசலிங்கத்தின் இல்லத்தை சென்றடைந்தும் அஞ்சலி உரை நிகழ்த்தப்பட்டது.

இந்தஅஞ்சலி நிகழ்வில் ஈ.பி.டி.பி புளொட் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் வர்த்தகர் சங்க உறுப்பினர்கள், வாடகைக்கார் சாரதிகள்சைக்கிள் ரிச்ஷா சாரதிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (சி-3)

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவத்தையொட்டி ஏற்பாடுகள் தீவிரம்

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி வியாபாரிகள் பிரதான வீதிகளில் கடைகளை அமைப்பதற்கு ஆலய நிர்வாகம் அனுமதி வழங்கவில்லை.

பதிலாக தெற்குப் பக்கமாக உள்ள வயல் நிலத்தில் கடைகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மஹோற்சவத்தை யொட்டி வழமை போல் இம்முறையும் பக்தர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தின் தற்காலிக அலுவலக மொன்று ஆலய வீதியிலுள்ளகட்டிடத்தில் செயற்பட்டு வருகின்றது.

இவ் அலுவலகத்தில் தினமும் இவ் விரண்டு சமுர்த்தி அலுவலரும் கிராம சேவையாளர் ஒருவரும் பணியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-120)

# செம்பியன் பற்றில் விமானத் தாக்குதல் இரு வீடுகள் முற்றாகச் சேதம்

(செம்பியன்பற்று)

செம்பியன்பற்று அண்மையில் ஏற்பட்ட கிபிர் விமானத் தாக்குதலில் இரண்டு வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகத்தெரிவிக்கப் படுகிறது.

தாக்குதலில் நடைபெற்ற வேளையில் வீட்டில் எவரும் இல்லாததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-42)

## நாகர் கோவில் பிரதேசத்தில் ஹெலிகொப்டர் கடும் தாக்குதல்

(வடமராட்சி கிழக்கு)

நாகர்கோவில் இராணுவ முகாம்மீது, நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல்களை மேற் கொண்டுள்ளனர்.

இதனையடுத்து இராணுவ முகாமில் இருந்த படையினரும் பதில் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

அத்துடன்,

இரவு 8 மணி முதல் 11 மணி வரை இராணுவ உலங்குவானூர்தியொன்று நாகர் கோவிலின் பல பாகங்களையும் சுற்றி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தியதில் தொடர் வெடிச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தது.

இதேவேளை,

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நாகர்கோவில் இராணுவ முகாம் தவிர்ந்த ஏனைய முகாம்கள் வாபஸ்பெறப்பட்டதையடுத்து இம் முகாமில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(க-42)

## தரமான முளை திறன் மிக்க விதைகள் இன்றி யாழ்.விவசாயிகள் பரிதவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில்மரக்கறி செய்கைகளில் ஈடுபட ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு தரமான முளை திறன் மிக்க உறுதிப்படுத்தப்பட்ட விதைகள் இல்லாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக மரக்கறி செய்கையில் ஈடுபடுவதற்கென கூடியபணம் செலுத்தி, விளை நிலங்களை உழுது பண்படுத்தியபோதிலும்கூட, விதைகள் இல்லாததால் செய்வது இன்னதென்பது தெரியாத நிலையில் விவசாயிகள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [77]

## கிளிநொச்சியில் தொடரும் அனர்த்தம்

## 24பேர் கால்களை இழந்தனர்

### அகற்றப்படாத நிலையில் மிதிவெடிகள்

(அச்சுவேலி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மிதிவெடிகள், அமுக்க வெடிகள், போன்ற வற்றின் தாக்கம் காரணமாக 24 பேர் தமது கால்களை இழந்துள்ளதாக செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றன.

அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கையில், இப் பகுதியானது அடிக்கடி இராணுவ நடவடிக்கைகளுக்கு உட்படுவதனால் சொந்தப் பாதுகாப் பிற்காக யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பாரும் மிதிவெடிகள், போன்றவற்றைம் புதைத்து வைத்திருப்பதால் அப் பகுதியில் நடமாடுப் பொதுமக்கள் இத்தகைய அனர்த்தங்களுக்கு உட்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்திலேயே பல எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதும் தற்போது இப் பகுதி விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க 57)

யாழ் . மாவட்டத்தில்

## போஷாக்கு குன்றிய நிலையில் அவதியுறும் முன்பள்ளி சிறார்கள்

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்திலே உள்ள முன்பள்ளிச் சிறார்களிலே நூற்றிற்கு ஐம்பது வீதமான மாணவர்கள் போஷாக்கு அற்ற நிலையில் வயதிற்கு ஏற்ற வளர்ச்சி அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் அவர்கள் கல்வியில் கிரகித்தல் திறனையும் மிகவும் குறைவாகவே கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அச்சுவேலி கஜமுகன் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு அமைப்பாளர் யு.எல். ரவி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கஜமுகன் பாடசாலை தலைமை ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

யாழ். மாவட்டத்தில் முன்னைய காலங்களில் இடம்பெற்ற போர் அனர்த்தங்களினாலும் தற்போதைய நெருக்கடி நிலைகளாலும் மாணவர்களின் போஷாக்கு நிலை மேலும் மோசமான நிலையை அடைந்துள்ளது.

இந்த நிலை நீங்க வேண்டுமானால்முன்பள்ளி மாணவர்களின் உடல் வளர்ச்சியில் பெற்றார்களும் பொது அமைப்புக்களும் பொறுப் புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லையேல் எதிர்காலத்தில் ஓர் ஆரோக்கியமான உடல் உள வளர்ச்சியுடைய இளஞ் சந்ததியை உருவாக்குதல் என்பது கேள்விக்குறியானதாகவே இருக்கும் என்றார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின்ஓய்வு பெற்ற அதிபர் சி. தங்கவேல் அங்கு உரையாற்றுகையில்.

கிராமப் புறப் பாடசாலைகளிலே தமது ஆரம்பக் கல்வியை விருத்தி செய்து கொள்ளும் மாணவர்கள் தமது உயர்கல்வியினை தொடர்வதற்காக நகரப் புறப் பாடசாலைகளைத் தேடி ஓடுவது எப்போது நிறுத்தப்படுகிறதோ அப்போது தான் கிராமியப் பாடசாலைகளின் வளர்ச்சியானது மேல் நிலையை அடையும்.

இந்த விடயத்தில் மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் நன்கு சிந்தித்து கிராமிய முன்பள்ளி பாடசாலைகளினதும் ஆரம்ப பாடசாலைகளினதும் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என்றார். (14)

யாழ். மாவட்டத்தில் மலேரியாவால்

## கடந்த இருவருடங்களில் மட்டும் 20 ஆயிரத்து 17 பேர் பாதிப்பு

(நீராவியடி)

யாழ்.மாவட்டத்தில் கடந்த இருவருடங்களில் 80 ஆயிரத்து717 பேர் மலேரியா காய்ச்சலுக்கு இலக்காகியுள்ளார். இவர்களில் 59பேர் மரணமடைந்துள்ளனர் என யாழ்.மாவட்ட மலேரியா தடை இயக்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

90 ஆம் ஆண்டில் இருந்து மலேரியா நோய்த்தாக்கம் பல்வேறு காரணங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இருப்பினும் 97ஆம் ஆண்டின் பின் இந்நோய்த்தாக்கத்தில் திடீர் அதிகரிப்பு காணப்படுகிறது.

98 இல்,32 ஆயிரத்து 915 பேர் மலேரியாவின் தாக்கத்திற்குட்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

98,99,ஆம் ஆண்டுகளின் ஜனவரி மாதத்தில் மட்டும் முறையே 4665,4405 பேர் மலேரியா நோய்க்கான சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவ் வருட ஜனவரியில் 1743 பேர் மட்டுமே மலேரியாச்சிகிச்சை பெற்றுள்ளனர்.

இது யாழ். மாவட்டத்தில் மலேரியாத் தாக்கம் தணிவடைவதையே எடுத்துக் காட்டுகிறது.

மலேரியா நோய்த்தடுப்பு சம்பந்தமான எமது நடவடிக்கைகளுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கும்பட்சத்தில் இந் நோய்த்தாக்கத்தினைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியும் எனவும் அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

95ஆம் ஆண்டில் இடம்பெற்ற வன்னி இடப்பெயர்வின் பின்னர் அவர்கள்யாழ். மாவட்டத்தின் மீளக் குடியேற்ற தொடங்கிய பிறகே மலேரியா நோய்த்தாக்கம் யாழ்.மாவட்டத்தில்அதிகரித்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. (உ-78)

## கஞத்துறை வழக்கு விசாரணை யாழ்.நீதிமன்றிற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரின் வழக்கு விசாரணையாழ். மாவட்ட நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

முத்துராசா அன்ரன் என்பவரின் வழக்கு விசாரணையை யாப்பு நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

உறவினர்களால் கொண்டு வரப்பட்ட மனுவை எற்றுக் கொண்டு இ.த. விக்னராஜா நீதிவான் எதிர்வரும் 22 ஆம் திகதி மேற்படி நபர் யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு களுத்துறைச் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (வ-ச)

## 2001ம் ஆண்டு க.பொ.த உ.த. பரீட்சைக்கு தோற்றும் மாணவர்க்கான அறிவுறுத்தல்

2001 ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சை நடைபெறும் மாதத்துக்கு முதல் மாதம் வரையான இறுதி மூன்று ஆண்டுகள் கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டமே பரீட்சாத்தியின் மாவட்டமாகக் கணிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முந்திய ஆண்டுகளில் இறுதி ஐந்து ஆண்டுகள் கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் பரீட்சாத்தியின் மாவட்டமாக கணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [சி-19]

## வெடிக்காதஷெல்

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கு சமீபமாக உள்ள வெற்றுக் காணியில் வெடிக்காத நிலையில்ஷெல் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-30)

## பங்குனி குளிர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பங்குனித் திங்கள் குளிர்த்தி உற்சவத்தினை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மனின் கிராம திருவீதியுலா இன்று மாலை 7மணிக்கு இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து மகேஸ்வர பூசை யும் இடம் பெறும்.

## கல்குவாரி வெடியில் மூவர் பலி

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசத்தில் ரங்காரெடி என்னும் இடத்திலுள்ளகல்குவாரியில் ஏற்பட்ட வெடிவிபத்தின் போது 3 பேர் கொல்லப்பட்டதுடன் 9 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது: பாறைகளை வெடிவைத்து தகர்ப்பதற்கான டிற்றோ நெற்றுகளைப் பரிசோதித்துப் பார்த்துக் கொண்டிருந்த போது. அவை வெடித்ததாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 4 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (து-5)

மிகக் குறைந்த கட்டணம்,
தரமான சேவை

வலம்புரியில் எந்நேரமும் நீங்கள்
விளம்பரம் செய்ய இன்றே
தொடர்பு கொள்ளுங்கள்

வலம்புரியின் விளம்பர முகவர்

சிற்றிரெலிக்கொம் அன்ட் கொம்பியூட்டர் சேவை

இல: 11, பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி

புத்தாண்டுக்கான மலிவு விற்பனை
விஷேட தள்ளுபடியுடனான விற்றுத் தீர்த்தல்,
இல. 06 கஸ்தூரியார் வீதியில்

அமைந்துள்ள எமது மலிவு விற்பனை நிலையத்தில்
விஷேட தள்ளுபடியுடன் சகல பொருட்களையும்
பெற்றுக் கொள்ள முந்திக் கொள்ளுங்கள்.

மோகனம் ரெக்ரைல்ஸ்

இல. 06 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி
இல. 41 நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

(கி/155)

நுணங்கிய கேள்விய
ரல்லார் வணங்கிய
வாயின் ராதல் அரிது

- குறள்

# வலம்புரி

## எங்களுக்கென்று

துன்பங்களும், பாதிப்புக்களும் வரும்போது உள்ளங்கள் உந்துசக்தி பெறுகின்றன. உண்மை புலர்கிறது. நேற்றைய ஒட்டோ சாரதியின் அனுதாப ஊர்வலத்தில் கனன்று தெறித்த கருத்துக்கள் பற்றியே இங்கு குறிப்பிடவிழைகிறேன்.

1972 இல் இளைஞர்கள் உள்ளத்தில் உதித்த அதே கருத்தை மீளவும் அசைபோட்டிருந்தனர் அந்த ஒன்றுக்காய் உயிர் நமக்கு வெல்லம் அல்ல என்று செயலிலே காட்டும் காலமிது. களத்திலே நிற்கும் பார்த்தர்களைக் காணுகின்ற வேளையுமிது.

எங்களுக்கென்றொரு ஆட்சி வேண்டும் என்ற வாசகம் துயரத்தைத் தூண்டும் சோக வார்த்தைகளைக் கிழித்துக் கொண்டு நின்றோர் செவிகளைத் துளைத்துக் கொண்டு சிந்தனைப் புரவியை வேகமாய் ஓட்டியது. இந்தச் சிந்தனை என்றோ எழுந்து மூன்று தசாப்தங்களாக முனைப்புடன் செயற்படுகிறது

இந்த மண் காணுகின்ற இழப்புக்கள் தேவையற்றனவாய் உள்ளங்களைத் தேம்ப வைக்கின்றன. ஓட்டோவிற் சென்ற பெற்றார் களத்திலே மாண்டனர். பச்சிளங்குழந்தை பெற முடியாப் பெற்றோரை இழந்து ஏதிலியாயிற்று ஆனாலும் அதன் மண்ணொன்றுவிடிவு காணும் போது அதற்காகத்தான் கொடுத்த விலையைப் பரிசீலிக்கும் போது நிச்சயமாக நெஞ்சு தளம்பாது நிமிர்ந்து நிற்கும்

வஞ்சக நாடகங்கள் காலங்காலமாக நடந்தேறும் சுடலைப்பூமி ஸ்ரீலங்கா. இது இடுகாடும்- சுடுகாடுமாய் நிரந்தர இடத்தைப் பிடித்து விடக்கூடாது என்பதுதான் புத்திஜீவிகளினதும்- சமாதானம் விரும்பிகளினதும் சிந்தனை வேகமும் உந்துதலுமாகும். இந்தச் சந்தர்ப்பசூழ் நிலைபிறழ்ந்து விடக் கூடாது. நடுவு நிலையுடன் வாழ்- வாழவிடு என்ற யதார்த்தம் பிறந்தேயாக வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பது கடினமாயினும் கண்டேயாக வேண்டும். அல்லது அல்லல்களுக்கு மத்தியில் இருநாடு உருவாவதைத் தடுக்கவே முடியாது போய்விடும்.

- அன்புடன் ஆசிரியர்

## வேடுவக் குடும்பங்களுக்கு உதவி வழங்க அவுஸ்திரேலிய அரசு தயாராம்

(ஈச்சமோட்டை)

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் வசித்துவரும் வேடுவக் குடும்பங்களுக்கு புதிய களிமண் வீடுகளை அமைப்பதற்கு உதவி வழங்க அவுஸ்திரேலியா அதன் தேசிய சமூக உதவித்திட்டத்தின் கீழ் முன்வந்துள்ளது.

இப்பகுதியில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 13,000/- வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாகரைப் பகுதியில் 22 வேடுவக் குடும்பங்கள் வசித்து வந்ததாகவும் அண்மைக்கால வன்செயல்களில் இவர்களில் சிலர் மகியங்கனைப் பகுதி நோக்கி இடம் பெயர்ந்து விட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

ஆயினும் தற்போது உள்ள 21 குடும்பங்களுக்கும் தலா 13000/- செலவில் களிமண் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என அவுஸ்திரேலிய தேசியஉதவித்திட்டத்தினை செயல்ப்படுத்தும் அதிகாரி எ. ஜெயக்குமார் தெரிவித்தார் (க-59)

## வளர்ப்புநாய்களுக்கு வைரஸ் தாக்கம் வைத்திய அத்தியட்சகர் எச்சரிக்கை

(புலோலி)

யாழ். மாவட்டத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு வைரஸ் தாக்க நோய் பரவி வருவதனால் வளர்ப்பு நாய்கள் இறக்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாய்களுக்கு இவ் வைரஸ் நோய் ஏற்பட்டு விட்டால் இதற்கு சிகிச்சை இல்லை. ஆனால் நாய்களுக்கு அவை குட்டிகளாக இருக்கும்போது 3 மாதத்தில் முக்கூட்டு வக்சின்களை ஏற்றிவிட்டால் இந் நோயின் தாக்கத்திலிருந்து நாய்களைப் பாதுகாக்க முடியும் என்று யாழ். கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியகலாநிதி திருமதி. புனிதம் தங்கராஜா தெரிவித்தார். இந் நோய்க்கான தடுப்பூசி மருந்தை நாய் வளர்ப்பவர்கள் கொள்வனவு செய்து நாய்களுக்கு ஏற்றலாம் என்றும் கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்திருக்கிறார்.

(க-52)



## தவக்கால சிந்தனை

### 26 ஆம் நாள்

உலகில் உருவெடுத்த அனைத்து உயிரினங்களும் அடக்கு முறையும் அச்சுறுத்தலும், பகைமையும் அற்ற நிம்மதியான அமைதியான சூழலில் தம் வாழ்வியலை அமைத்துக் கொள்ளவே விளைகின்றன, இவற்றுள் இறைசாயலாக ஆறறிவும், நிறை ஆற்றலும் கொண்டவனாகப் படைக்கப்பட்ட மனிதன் அமைதியும், நிம்மதியும், தனித்துவமும் நிரம்பியவனாக வாழ முற்படுவது இயற்கையும் அவனது உள்ளார்ந்த சுதந்திரமுமாகும். அதை அடையும் தணியாத தாகத்தில் இவற்றை நாம் எங்கே? எங்கே? என்று தேடி அலைகின்றோம் சமாதானம் வராதா? நிம்மதிநிழலிடாதா? விடுதலை கிட்டாதா? என ஏங்குகின்றோம். ஆனால் இவை அனைத்தும் இன்று எட்டாத கனியாக, கானல் நீராக மறைந்து கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் என்ன? விடைதான் எங்கே?

நாம் அடையவிரும்பும் அன்பையும், அமைதியையும், சீரான வாழ்வையும் பிறருக்கு வழங்கிடும் கருவியாக எம்மை மாற்றவேண்டும். அப்போது மகிழ்ச்சியும் மனநிறைவும் எம்மைச் சூழ்ந்து கொள்ளும். பெறுவதை விட கொடுப்பதில் நிறைவடைய வேண்டும். மன்னியுங்கள். மன்னிக்கப்படுவீர்கள் கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். ஏனெனில் நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ. அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.

எஸ். ஜேசுதாஸ்
கொழும்புத்துறை

# மென்மையான குணம்கொண்ட 2 ஆம் எண்காரர்

## எண் 2 (சந்திரன்)

எண் 2 ஐப் பிறப்பெண்ணாகக் கொண்டவர்கள் மென்மையானவர்கள் இவ்வெண்ணானது மாதத்தில் வரும் ஆங்கிலத் திகதிகளான 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களைக் குறிக்கும். அத்துடன் இவ்எண்ணில் பெயர் எண்ணைக் கொண்டவர்களையும், இவ் எண்ணோடு தொடர்பு கொண்டவர்கள் அல்லது இவ் எண் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள் எனலாம். அத்தோடு யூன் 21 இற்கும் யூலை 29 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களையும், தன்முழு ஆதிக்கத்திற்குள் கட்டுப்படுத்துகிறது. இவ் எண்ணிற்கு சந்திரன் ஆட்சிப்படுத்துகிறான்.

### இவ் எண்ணின் பொதுவான குணங்கள்

சந்திரனின் ஆட்சிக்குட்பட்டவர்கள் தன்னம்பிக்கை அற்றவர்களாகவும், சந்தேகம் உடையவர்களாகவும், கற்பனாசக்தி உடையவர்களாகவும், ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களாகவும், எதற்கும் சந்தேகத்தோடு செயற்படும் தன்மை கொண்டவர்களாகவும் இருப்பதை அவதானிக்கலாம். இவர்கள் பொதுவாகவே தங்களை நம்பிக்கையற்றவர்களாகஉருவாக்குகிறார்கள். பிறரையும் நம்பான், தன்னையும் நம்பான் என்ற கருத்து இவ் எண் காரர்களிற்குப் பொருந்தும். இவர்கள் தமது உடமைகளில் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

இவ் எண் காரர் கற்பனா சக்தி உடையவராக இருப்பதால் இவர்கள் சிறு முயலையும் சிங்கம் என உருவாக்கி சிந்தை கலங்குவார்கள். இவர்கள் மாசுபடும் செயலில் ஈடுபடமாட்டார்கள். வாக்குசாதுரியமான இவர்கள் வையகத்தை வசீகரிக்கும் பேச்சாற்றல் மிக்கவர்கள். மிகப் புகழ் பெற்றவர்களும், மிகக்கெட்டவர்களும் இவ் எண்ணில் அடங்குகின்றார்கள். இவர்களிற்கு தெய்வ நம்பிக்கை அல்லது குரு நம்பிக்கை, அல்லது தன் நம்பிக்கை என ஏதேனும் ஒரு வழியில் நம்பிக்கை ஏற்பட்டால் இவர்களது வாழ்வில் நம்பிக்கை ஏற்பட்டு செயற்கரிய விடயங்களை அல்லது அபூர்வ விடயங்களை மிகச் சாதாரணமாக செய்து முடிப்பர்.

### (சோதிட பலன்)

இவ்எண் ஆதிக்கங்கல்மேன்மையானவர்கள், சாந்த சீலராக வாழ்வார்கள் மற்றவர்களோ சண்ட பிரசண்டமான முறைகளில் பேசுவார்கள். இவர்களில் சத்தியம் பேசி வாழ்பவர்களையும், பொய்யே வாழ்வாகக் கொண்டு வாழ்பவர்களையும் காணலாம். இவர்களது புத்தியும் ஒரே மாதிரி இராது. சூழ்நிலைக்கு ஏற்ற தன்மையில் தம்மையும் மாற்றிக் கொண்டு இருப்பர் தர்க்கம் புரிவதில் வல்லவராக இருப்பார்கள்.

### இவ் எண்ணை உடையவர்களது தொழில்நிலை

இவர்கள் நேர்மை, நம்பிக்கை, நாணயம் உடையவர்களானால் பலரது உதவிகளைப் பெறுவார்கள். பேச்சாற்றல் மிக்க இவர்கள் வழக்கறிஞர்களாகவும், கலைஞர்களாகவும், பிரபல எழுத்தாளர்களாகவும், பத்திரிகையாசிரியர்களாகவும் அமையலாம்.

திரைப்படத்துறையிலும், திரைப்படத் தயாரிப்பாளர்களாகவும், நகைக்கடை நடத்துபவர்களாகவும், படப்பிடிப்பாளர்களாகவும், அச்சக உரிமையாளர்களாகவும், வாசனைத்திரவியங்கள் தயாரிப்பவர்களாகவும், விவசாயச் செய்கையில் ஈடுபடுபவர்களாகவும், விவசாயப் பொருட்கள் ஏற்றுமதியாளர்களாகவும், அழகுசாதன நிலையங்கள் நடத்துபவர்களாகவும், உணவகங்கள் நடத்துபவர்களாகவும், அமைவதைக் காணக்கூடியதாக உள்ளது.

### திருமண நிலை

ஆதிக்கம் கூடியவர்கள் திருமண விடயத்தில் சுகம் பெற்றவர்களாகவும், ஆதிக்கம் குறைந்த நிலையில் பிறந்தவர்கள் திருமண நிலையில் சுகமற்றவர்களாகவும் இருப்பதைக் காணலாம். இங்கு ஆதிக்கம்கூடிய நிலை, ஆதிக்கம் குறைந்த நிலை என்பதைத் தங்களுடைய ஜாதகத்தைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். இவர்கள் ஆணாக இருந்தாலும்சரி, பெண்ணாக இருந்தாலும் சரி தமது 29 வது வயதிற்குப் பின்னர் திருமணத்தை நிர்ணயம் செய்து கொள்வது உத்தமம் எனலாம்.

திருமணம் 29 வது வயதிற்கு முன்னர் இடம் பெறின் முறிவுநிலை ஏற்படலாம். நீதி ஸ்தலங்களிற்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். இவர்கள் தமது திருமணத்தை காதல் முறையில் முடிப்பது அவ்வளவு திருப்திகரமானதல்ல. இவர்கள் தமது நண்பர்களை, கணவனை, மனைவியை 1, 3, 4, 7, 8 போன்ற எண்களில் தெரிவு செய்வது சிறப்பானது.

### நோய்நிலை

பெரும்பாலும் நரம்புத் தளர்ச்சி, கைகால் நடுக்கம், கால்உழைவு, பாரிசவாதம், நீரிழிவு போன்ற நோய்களை உடையவர்களாக இவர்கள் காணப்படுவர். சந்திரன் ஒரு நீர்க்கிரகம் என்பதால் நீர் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றது. இவ் எண் காரர்கள் கூடுதலாக நீர் பருகுவதாலும், பழங்களை அதிகம் உண்பதாலும் இதனைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ் எண் காரர்கள் தங்களுடைய நற்காரியங்களை மாதத்தில் வரும் 7, 16, 25 ஆம் திகதிகளில் மேற்கொண்டால், அக்காரியங்கள் சிறப்பான வெற்றிகளைப் பெற்றுத்தரும்.

### 2 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

இத்திகதியில் பிறந்தவர்கள் தமது சக்திக்கு அப்பாற்பட்ட கற்பனாசக்தி உடையவர்களாகவும், நம்பிக்கைத் தன்மை அற்றவர்களாகவும், புதுப்புது எண்ணங்களைக் கொண்டவர்களாகவும், சமூகத்தினதும், நாட்டினதும் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்துபவர்களாகவும்காணப்படுவார்கள். அத்துடன் இவ் எண்காரர்கடவுள் நம்பிக்கை உடையவர்களாகவும், நண்பர்களுடன் விசுவாசம் உடையவர்களாகவும் காணப்படுவார்கள்.

### 11 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

தெய்வ நம்பிக்கை உடையவர்கள் தம்மையே தமக்கு உதவி என்பதுபோல எந்தக் காரியத்தையும் தாமே செய்து வெற்றி பெறுவார்கள். இவர்களுக்கு ஆரம்பத்தில் பொருளாதார வசதி ஓரளவு பற்றாக்குறையாக இருக்கும். சண்டை, கோபதாபநிலை இவர்களிற்கு அறவே பிடிக்காது. தமது நண்பர்களுடன் சகஜமாகப் பழகுவார்கள்.

### 20 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

இவர்கள் சுயநலமின்றி தம் செயற்பாடுகளை அல்லது காரியங்களைச் செய்வார்களேயானால் இவ்வுலகில் தர்மவான்களாக தம்மை உருவாக்கி விடுவார்கள். மெழுகுவர்த்தி உருகி பிரகாசத்தைக் கொடுப்பது போல தம்மை உருக்கி உலகத்திற்கு பிரகாசத்தைக் கொடுப்பார்கள்.

### 29 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

இவர்கள் பொதுவாக முரண்பாடு உடையவர்கள். பழி பாவங்களிற்கு அஞ்சாதவர்கள். சிறுவயதில் இருந்து கெட்ட நடத்தை உடையவர்களின் சகவாசத்தை நாடி அவர்களது பழக்க வழக்கத்தைக் கைக்கொண்டு அந்நிலையை அடைந்து விடுவார்கள். இந்நிலைக்கு உட்படாவிட்டால் சிறந்த உழைப்பாளிகளாகி கோடீஸ்வரராக இருப்பார்கள். ★

-ஏ. இராஜநிதி-
(அல்வாய்)

## மோட்டார் சைக்கிள் விபத்து பல்கலை மாணவி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மாணவி பாலசிங்கம் தர்ஷினி சங்கத்தானை பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பல்கலைக் கழக மாணவி சங்கத்தானை வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை குறுக்கே வந்த சைக்கிளுடன் மோதியதினாலேயே காயம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

(ச,10 5-21)

### பளைப்பகுதி...

குமாரதுங்காவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி பக்ஸ் மூலம் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பளைப்பிரதேச யுத்த சூழ் நிலைக்குள்ளாக்கி இருப்பதால் அங்குள்ள மக்கள் உணவு வசதி மருத்துவ வசதி இன்றி கஷ்டப்படுவதாக அறிகிறேன் இந்த மக்களையும் பளை வைத்திய சாலையில் உள்ள நோயாளிகளையும் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்,

பிரதான வீதியான கண்டி வீத்தடைப்பட்டிருபதினால் அவர்களை புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி, கெற்பெலி, கச்சாய் றோட் ஊடாக வெளியேறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் ஜனாதிபதியைகேட்டுள்ளார்'

### இன்நாட்டை...

கள் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உண்டு.

நீண்டகாலமாகத் தீர்க்கப் படாமலிருக்கும் இனப்பிரச்சனையை அரசும் விடுதலைப் புலிகளும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் தீர்ப்பதிற்கு முன்வரவேண்டும்.

கடந்த புதன்கிழமை கண்டியில் நடைபெற்ற கத்தோலிக்க ஆயர்களின் மகாநாட்டிலே மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அம் மாநாட்டில்நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானமொன்றில்,

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு மட்டுமல்ல இலங்கையில் வாழுகின்ற பல்லின பல சமயமக்களினதும் நாடு என்பதை சிங்கள மக்கள் உணரவேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் வலியுறுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

### ஆசிரியர்--

சேர்ந்த 15 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு-

**ஆரம்பக்கல்வி**

ஜெகதீஸ்வரி துரைராசா, திருமகள் பத்திநாதன், திபாகரி நடராஜா, கந்தசாமி கௌரி,

**ஆங்கிலம்**

ராஜினி சுப்பிரமணியம், ரஜனி சிவஞானம், சின்னத்துரை தர்மானந்தி, லக்ஷலா நடராஜா, தனபாலன் பிரியலட்சுமி, கந்தையா ரஜிகரன், சரோ பேனிதா ஜோசப் சாந்தராஜன், சுதர்ஷினி குணநாயகம்.

**மரவேலை**

ஜேசுராஜன் பிரபாகரன்.

**கணிதம்**

தாரணி பத்மநாதன், சுதாஜினி ஜெகநாதன்:

### 328குடும்பங்கள்...

இருந்ததாக எமது வடமராட்சி செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இம் மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களோ பொது அமைப்புக்களோ முன்வரவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-43)

### அம்புலன்ஸ்..

வருகின்றது.

யாழ். போதனா வைத்திய சாலை, சாவகச்சேரி வைத்தியசாலை அம்புலன்ஸ் சகிதம் பளைப்பகுதிக்குச் செல்ல முற்பட்டபோதே இவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. (ந-21)


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை பாலசிங்கம்

கைதடி கிழக்கு கைதடியைச் சேர்ந்த திரு.சங்கரப்பிள்ளை பாலசிங்கம் நேற்று நண்பகல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற வல்லிபுரம் சங்கரப்பிள்ளை சங்கரப்பிள்ளை சடைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் புஸ்பலீலாவதியின் அன்புக்கணவரும், டிபர்சன், பாலிஷா, கமிர்சன், சமிர்சன், சனர்சன், சரண்சியா ஆகியோரின் அன்புத் தந்தையாரும். தம்பையா சங்கரப்பிள்ளை, சங்கரப்பிள்ளை சின்னம்மாஆகியோரின் மருமகனும், வரதராஜா (நகரசபை சாவகச்சேரி), இராஜேஸ்வரி (கைதடி), சண்முகராசா, யோகேஸ்வரி சிறிஸ்கந்தராஜா (லண்டன்), புஸ்பராஜா [லண்டன்] ஆகியோரின் சகோதரரும், புனிதவதி, காசிநாதர் புவனேஸ்வரி, சந்திரன் (சுவிஸ்), குகந்தவி [லண்டன்], பேரின்பநாயகி (லண்டன்), கனகம்மா (கனகா பத்திரிகை நிலையம்- திருநெல்வேலி), கனகராஜா, புஸ்பராசா (வயோதிபர் இல்லம்,கைதடி) யோகமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்,

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் கைதடி கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைக்காக கைதடி ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உரவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
கனகா 'பத்திரிகை நிலையம்
திருநெல்வேலி

(சி.161)


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனம் தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணத் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டுஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

#### உரிய நேரத்தில் சிகிச்சை இன்றி

# கர்ப்பிணிப் பெண் யாழில் மரணம்

# ஏனையோர் வைத். அனுமதி!

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் கோலி குறஸ் குழுவினரால் பளை வைத்திய சாலையில் இருந்து அழைத்து வரப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிககப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணான சிறிரஞ்சித் இராசேஸ்வரி (வயது 31)அவசர கிகிச்சையின் போது மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பளை வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அழைத்துவரப்பட்ட ஏனைய நோயாளிகள் நால்வரும் யாழ் போதன வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு.

புலோப்பளையைச் சேர்ந்த எஸ். நந்தகுமார் [வயது 30] வண்ணான் கேணியைச் சேர்ந்த பொ, யோகராஜா (வயது 30) பளையைச் சேர்ந்த ரீ. ரேவதி [வயது 29] புலோப்பளையைச் சேர்ந்த எஸ். கமலாசினி [வயது 20].

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இவர்களை அழைத்துவரப் பளை சென்ற போது மிருசுவிலுக் கப்பால் செல்ல அனுமதிக்காத படையினர் தாம் காயமடைந்தவர்களை அழைத்து வருவதாகக் கூறினார்.

இவ்வாறு ஐந்து பேரை அழைத்து வந்த படையினர் மிருசுவிலில் வைத்து அவர்களை செஞ்சிலுவைப் பிரதிநிதிகளிடம் கையளித்தனர், [ச 12-21]

### பளை--

பின்னர் தேடுதல் நடத்திய போது 21 புலிகளின் சடலங்களை தாங்கள் கண்டெடுத்ததாகவும்,

நாகர் கோவில்ப்பகுதியில் நடைபெற்ற மோதல்களில் 7 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (வ)

### அரசாங்கமும்--

ஒன்றின் உதவியைப் பெற வேண்டும்.

அரசாங்கம் சமாதானத்தை ஒரு புறமாகவும், மறு புறத்தில் யுத்தத்தையும் மேற்கொள்வதனால் இராணுவத் தீர்விற்கே அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பது டனாகிறது.

இரு சாராரிடமும் மன வேற்றுமையும் பகைமையும் அதிகரித்து வருவதனால் சமாதானப் பேச்சுவார்த்தை பின்தள்ளக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு யாழ், மன்னார் மறைமாவட்ட ஆயர்கள் கொழும்பில் வைத்து கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்கள் அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிறநாடுகளின் உதவியைக் கோருவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

புரிந்துணர்வுடனும், தன் நம்பிக்கையுடனும்,நல்லெண்ணத்துடனுமான சமிக்ஞைகளை இரு சாராரும் காண்பித்து துரிதகதியில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தகைய சமாதான முயற்சிகளுக்கு தமிழ்க்கட்சிகள் கட்சிவேறுபாடு, - இன வேறுபாடு இன்றி முழுமனத்துடன் ஒத்துழைப்பை வழங்கி பேச்சை ஆரம்பிக்க உதவ வேண்டும். (வ)


**ஸ்ரீ'செல்வா**
யாழ் ஸ்ரான்லி வீதி
காலை10-30 பி.ப. 2-30
சரத்குமார்
றோகிணி
நடித்த
**நட்சத்திர நாயகன்**
குடும்பச் சித்திரம்
(0015ɪ)


### ஓயாத--

கன்
(சோமசுந்தரம் ராஜேந்திரம் யாழ்ப்பாணம்)
★ மேஜர் கோகிலா
(இராசதுரை ஜசோதாரணி நெடுங்கேணி)
★ கப்டன் சுடர்விழி
(தர்மபாலா சுதர்ஷினி யாழ்ப்பாணம்)
★ கப்டன் அன்புவிழி
(பூபாலசிங்கம் லீலாவதி யாழ்ப்பாணம்)
★ கப்டன் துரியோதனன்
(ஆனந்தகுமாரசா மிசர்மிலன் யாழ்ப்பாணம்)
★ கப்டன் கண்ணதாசன்
(ஆறுமுகம் கஜரூபன் மட்டக்களப்பு)
★ லெப்.அன்பு வேங்கை
(கருணாகரன் அமுதா முள்ளியவளை)
★ லெப். அன்பரசி
(கந்தையா மோகனாம்பிகை இராமநாதபுரம்)
★ 2-ம் லெப்.சசி
(யோசப் தவனேஸ்வரி வட்டக்கச்சி)
★ 2-ம் லெப்.உமா
(கந்தையா பாமினி பூநகரி)
வீரவேங்கைகளான
★ தென்னவன்
(கந்தசாமி சந்திரமோகன் மன்னார்)
★ கீர்த்திகா
(செல்வன் சிவரஞ்சினி யாழ்ப்பாணம்)
★ பாவை
(நடேசபிள்ளை நந்தினிதேவி திருமலை)
★ இளம்திரையன்
(இராமசாமி சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம்)
★ ஆரமுதன்
(கந்தசாமி நாகேஸ்வரன் யாழ்ப்பாணம்)
★ மதியன் / கவியரசன்
(இராமச்சந்திரன் இலங்கேஸ்வரன் வவுனியா)
★ ஈழச்செல்வன்
யாட்ராபிட் - யாழ்ப்பாணம்
★ கவியான்
(வெள்ளை யுவராஜேஸ்வரன்) திருமலை
★ வன்னி
(அந்தோனி லோகநாயகி) இரணைதீவு
★ பாணன்
(நல்லதம்பி ராசன்) கிளிநொச்சி
★ இசையரசன்
(மாசிலாமணி மேஸ்பாபு) யாழ்ப்பாணம்
★ அறிவுபுகழன்
(இராமசந்திரன் பிரபாகரன்) யாழ்ப்பாணம்
★ தேன்மொழியான்
(சண்முகம் புஸ்பநாதன் கிளிநொச்சி)
★ கௌதமி
கந்தசாமி ராதிகா (யாழ்ப்பாணம்)
★ வைதை / துரைமதி
இரத்தின கோபால் தயாளா கிளிநொச்சி
★ காணமதி
(கிட்டியான் கமலாதேவி) வவுனியா
★ பாக்கியம் - பாக்கி
மோகனராஜன் ஜேசுதாசன் யாழ்ப்பாணம்
★ கருமுகிலன்
(பேரம்பலம் கிருபாகரன்) மல்லாவி

சிறப்பு எல்லைப்படை
★ நாகன்
(சிதம்டரப்பிள்ளை செந்தில்நாதன்)
★ மேஜர்பரணிதரன்/பரணி
(நாகராசா சிவராசா மன்னார்)
★ கப்டன் றொபின்சன்
(பாலசிங்கம் பிரபாகரன் யாழ்ப்பாணம்)
வீரவேங்கைகளான
★ கௌசிகன்
(ஆறுமுகம் சதீஸ்குமார் அக்கராயன்)
★ இனியவன் / தமிழ்ப்புலி
(பஞ்சாட்சரம்செல்வக்குமார் மன்னார்)
★ முகுந்தன்
(செபமாலை செல்வம் யாழ்ப்பாணம்)
★ நிலானி
(விவேகானந்தம் சந்திரகுமாரி புதுக்குடியிருப்பு)
★ வடிவுராஜ்
(மாணிக்கப்பொடி கெங்காதரன் மட்டக்களப்பு)
★ கதிரொளி
(சின்னத்தம்பி தர்ஷினி யாழ்ப்பாணம்)
★ தமிழ்முரசு
(பன்னீர்ச்செல்வம் சங்கீதா யாழ்ப்பாணம்)
★ நர்மா
(மரியகுகதாஸ் சகாயமேரி நெடுங்கேணி)
★ கப்டன் நிவேதன் / தயானந்தன்
(துரைராசா சுரேந்திரன் மட்டக்களப்பு)
★ கப்டன் அன்புமணி
(கனகரத்தினம் சத்தியசுகி யாழ்ப்பாணம்) (வ-ச-7)

## ஈழத்தமிழர்பேரணி

(ஜேர்மன்)

ஜேர்மனின் பிரான் வேட் நகரில் ஈழத் தமிழர் களால் மாபெரும் ஆர்ப் பாட்டப் பேரணிஒன்று நேற்று காலை 10மணிக்கு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களை நிறுத்தவும் ஜேர்மனியிலிருந்து ஈழஅகதிகளை திருப்பியனுப் பும் நடவடிக்கையைக் கைவிடக் கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது: (வ-ச)

## புளொட் உதவி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித் துறை அந்தோனியார் தேவாலயம் துன்னாலைலூர்து மாதா தேவாலயங்களில் தங்கி இருக்கும் மக்களுக்கு புளொட் அமைப்பினர் உதவி வழங்கியுள்ளனர். (ச-7)

### இருவர்.

ரால் கைது செய்யப்பட்டதாகவும்மனித உரிமை ஆணைக் குழுவின் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-12)

### புலிகளின்--

தேவாலயம் ஒன்றின் பங்குத் தந்தை ஒருவரு கன்னியாஸ்திரி ஒருவரும் செம்பியன்பற்றில் பாதுகாப்பாக இருப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தார்கள். (வ)